**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.401 /2024**
**வழக்கு சாட்சி PW– 10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுதந்திராதேவி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | தங்கமணி | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | அடையார் | வயது | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 08th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சென்னை மாநகரம் அடையார் மாவட்டம், அடையார் சரகம் அடையார் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 02.06.2023ம் தேதி, சுரண்டை வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, எனது பொறுப்பு காவல் நிலையமான பாவூர்சத்திரம் காவல்நிலைய குற்ற எண்.171/2023, பிரிவுகள் 294(பி), 307, 427, 323, 506(2) இதச வழக்கு கோப்பினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டபோது, எனக்கு முன்னால் புலன் விசாரணை செய்த புலன் விசாரணை அதிகாரி அவர்கள் தயார் செய்த பார்வை மகஜர் போலவே இருந்ததினால், தனியாக பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை. அவர் விசாரித்த சாட்சிகளை விசாரணை செய்ததில், அவரிடம் கூறியதையே என்னிடமும் கூறியதால் தனியாக எந்த வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை.

அதன் பிறகு 16.06.2023 ம் தேதி, இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட TN–76–AS–4019 என்ற பிக்அப் வாகனத்தை நீதிமன்றத்தில் ஆஜர் செய்து பி.ஆர்.எண்.355/2023 என்ற எண் பெற்றேன். அதன் பிறகு வாதியின் வாகனமான TN–76–AL–0466 என்ற பஜாஜ் வாகனத்தை பஜாஜ் சர்வீஸ் சென்டரில் கொடுத்து மேற்படி வாகனத்தின் சேதமதிப்பு ரூ.15,901/– என்று சேதமதிப்பு சான்று பெற்றேன். மேற்படி சான்று வழங்கிய வினிஸ் என்ற மேனேஜரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அதன் பிறகு, 07.07.2023 ம் தேதி, இவ்வழக்கில் காயம்பட்ட மாரியப்பன் என்பவருக்கு சிறுகாயம் என்று காயச்சான்று வழங்கிய மருத்துவர். திருமதி.ராஜலட்சுமி அவர்களை விசாரணை செய்து அன்றைய தினமே வாக்குமூலம் பதிவு செய்தேன். காயம்பட்டவர்களின் காயத்தின் அடிப்படையில் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 307, 323, 427, 506(2) இதச இதச  வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

(எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

சாட்சி சென்னை காவல் இணை ஆணையர், கிழக்கு மண்டலம், சென்னை பெருநகரம், எழும்பூர், சென்னை 8 அலுவலக காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Ramachandran, Sub Inspector of Police, Video conference Co-ordinator சென்னை காவல் இணை ஆணையர், கிழக்கு மண்டலம், சென்னை பெருநகரம், எழும்பூர், சென்னை 8 அலுவலகம் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.09 10:45:17 +0530